


# ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் வருமானம் முன்புபோல் இல்லை



# காரணம் என்ன?

கோலாலம்பூர், ஜன. 12-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியில் சீரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றபோதிலும் அங்கு வருவோர் எண்ணிக்கை குறைந்திருப்பது குறித்து வியாபாரிகள் கவலை தெரிவித்திருக்கின்றனர். ஏற்கெனவே பெரிய குழி திடீரென ஏற்பட்டதால் அங்கு வருவோர் பாதுகாப்பு குறித்து கவலைப்படுவதே இதற்கு முக்கியக் காரணம் என்பது தெரிய வருகிறது.

இப்போதெல்லாம் நான் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா வழியாகச் செல்லும்போது மிகவும் கவனமுடன் இருக்கிறேன். அது மட்டுமன்றி







அந்த இடத்திற்கு குடும்பத்தாரையும் அழைத்துச் செல்வதில்லை என்று வினோத்குமார் என்பவர் கூறினார்.

அங்குள்ள நடைபாதையில் செல்லும்போது சிலர் மிகக் கவனமுடன் நடப்பதை நானே பார்த்திருக்கிறேன். என்னைக் கேட்டால் அந்தப் பகுதியில் மீண்டும் ஒரு முறை பரிசோதனை செய்யப்பட வேண்டும் என அவர் பரிந்துரைத்தார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பெரிய குழி ஏற்பட்ட சம்பவத்திற்குப் பிறகு மக்கள் வருகை அங்கு குறைந்திருக்கிறது.

இதனால் அங்குள்ள வியாபாரிகள் கவலை அடைந்திருக்கின்றனர். அவர்களின் நிலை உண்மையிலேயே கவலைக்குரியதுதான். இன்னும் பலர் அங்கு வரவே பயப்படுகின்றனர் என்றும் அவர் எஃப்எம்டியிடம் தெரிவித்தார்.



## பெரிய பாதிப்பு

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பெரிய குழி ஏற்பட்ட சம்பவம் வியாபாரிகளின் வருமானத்தில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக அங்கு உணவுக்கடை நடத்தி வரும் 45 வயதான நூர் அஸ்மாவதி என்பவர் தெரிவித்தார்.

அந்தப் பெரிய குழி ஏற்பட்ட சம்பவத்திற்குப் பிறகு முன்புபோல் அதிகமானோர் இங்கு வருவதில்லை. இப்போதுகூட ஓரளவுதான் வாடிக்கையாளர்கள் வருகிறார்கள். அந்தச் சாலை மூடப்பட்ட பிறகு வியாபாரம் மிக மோசமாகச் சரிவு கண்டது. வழக்கமாகக் கிடைத்த வருமானத்தைவிட கால்பகுதி வருமானம்தான் எனக்குக் கிடைக்கிறது என்று அவர் சொன்னார்.

கடந்த ஆண்டு ஆகஸ்டு 23ஆம் தேதி இந்தியா, ஆந்திராவைச் சேர்ந்த 48 வயது விஜயலெட்சுமி ஜாலான் மஸ்ஜிட் இந்தியா வழியாக நடந்து வந்த சமயம் நடைபாதையில் பெரிய குழி ஏற்பட்டு அதற்குள் புதைந்தார்.

அவரை மீட்கும் பணி பல நாட்கள் நடைபெற்றபோதிலும் அவர் கிடைக்கவில்லை. அவர் என்ன ஆனார் என்பது இன்னும் மர்மமாக உள்ளது. அதன்பின் அங்குள்ள பிரதான பாதையில் இருந்து மைடின் பேரங்காடி வரை 100 மீட்டர் தூரத்திற்கு மூடப்பட்டு மறுசீரமைப்புப் பணிகள் மேகொள்ளப்பட்டன.

இந்த நிலையில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்று அந்த நடைப்பாதை மீண்டும் திறக்கப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் கடந்த டிசம்பர் 31ஆம் தேதி அறிவித்தது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நிறைவுபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட சீரமைப்புப் பணிகள் முன்கூட்டியே நிறைவு பெற்றுவிட்டன.

## பயம் தேவையில்லை

இதற்கிடையே பாதிக்கப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகளுக்குப் பிறகு அங்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று நூர் அபாஃண்டி அலி என்பவர் தெரிவித்தார்.

நான் தினசரி அந்தப் பாதை வழியாக நடந்து சென்றுதான் வேலை இடத்திற்குச் செல்கிறேன். பாதுகாப்புப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்று அவர் சொன்னார்.

ஆனால் ஒருவேளை அந்த இடத்தில் இருக்கும் பாதுகாப்பு குறித்து அங்கு வருகை புரிவோர் இன்னும் அச்சம் அல்லது கவலை கொண்டிருக்கக்கூடும். ஆனால் சீரமைப்புப் பணிகள் நடந்து முடிந்து விட்டன. ஆகவே பாதுகாப்பு குறித்து கவலைப்படத் தேவையில்லை. பொதுமக்கள் தாராளமாக அங்கு வரலாம் என்று அவர் மேலும் சொன்னார்.

அதிகாரிகளும் அங்கு அடிக்கடி சோதனை நடத்த வேண்டும். மீண்டும் அதுபோன்ற சம்பவம் நிகழாமல் இருக்க அதை ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.